

கழக முப்பெரும் விழாவில், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஊடகவியலாளரும் – எழுத்தாளருமான ப.திருமாவேலனுக்கு முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் விருதினை வழங்கி வாழ்த்தினார்.

## Dummy முதலமைச்சரின் ஆட்சியில்

# காற்றில் பறக்கும் சட்டம் - ஒழுங்கு!

## காளையார்கோவில், கீழக்கரை படுகொலைகளைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, செப். 21 -**

**“Dummy முதலமைச்சரின் ஆட்சியில் காற்றில் பறக்கும் சட்டம் - ஒழுங்கு” என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காளையார்கோவில், கீழக்கரை சம்பவங்களைச் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் இதுகுறித்துப் பதிவிட்டிருப்பதாவது :-



**Dummy முதலமைச்சரின் ஆட்சி அமைந்த நாள் முதல் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு காற்றில் பறந்து கொண்டிருக்கிறது.**

**இராமநாதபுரம் கீழக்கரையில் கடந்த 15ஆம் தேதியும், சிவகங்கை காளையார்கோவிலில் அதற்கு அடுத்த நாளும் இரட்டைக்கொலைகள் நடந்து இருப்பது தமிழ்நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது.**

**காளையார்கோவில் சம்பவத்தில் ஆள் மாறி கொலை செய்து விட்டோம் என்று கூலிப்படையை சேர்ந்தவர்கள் சொன்னதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், கூலிப்படையை ஏவியவர்களை கைது செய்யாமல் காவல்துறை காலம் தாழ்த்துவது ஏன்?**

**‘குற்றவாளிகளை காவல் துறை பாதுகாக்கக் கூடாது’ என்று கொலையானவர்களின் உறவினர்கள் காளையார்கோவில் பகுதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**

**அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவோ, குற்றவாளிகளை கண்டுபிடிக்கவோ வக்கற்று, போராடுவோரின் மீது காவல்துறை தடியடி நடத்தி இருக்கிறது. காவல்துறையின் இந்த அடக்கு முறையை வன்மையாக கண்டிக்கிறேன்.**

**இந்த இரட்டைக்கொலை சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும்.**

**இதனால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடும், நீதியும் கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில்

# பூவிருந்தவல்லி நகர இளைஞரணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் - மரியம் பாத்திமா திருமணம்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்!

திருவள்ளூர், செப்.21–

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்த வல்லி நகர இளைஞரணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் – மரியம் பாத்திமா ஆகியோரது திருமண விழா, நேற்று (20–09–2026 ஞாயிற்றுக்கிழமை ) காலை 11.30 மணியளவில், திருவேற்காடு வேலப்பன்சாவடி கே.வி.என். திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

திருமண விழாவிற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில், கழக இளைஞரணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டா லின் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்கள் அ.முகமது ராஷிக் ஹனீப் – மரியம் பாத்திமா ஆகியோரை வாழ்த்தினார்.

நிகழ்ச்சிக்கு பூவிருந்த வல்லி நகரக் கழகச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே. சுரேஷ்குமார், நகர மன்றத் தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர் நகரக் கழக நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர்மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புன்னியாகோட்டி, ப. அன்பழகன், பி.சௌந்தரராஜன், ஷாஜகான், விமல் ஆனந்த், யுவராஜ், சத்யா முன்னிலை வகித்தார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ்.சதீஷ்குமார் மற்றும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சபரி, நிஜாமுதீன், தமிழ்ச்செல்வன், ஜெய்சுந்தர், தினேஷ்பாபு ஆகியோர் வரவேற்புரையாற்றினார்.

திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி இறுதியில் நன்றி கூறுகிறார். இத்திருமண விழாவில் ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, மாநில, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி. ஜெரால்டு, மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், ஜி.பி.ராஜா, கே.இ. பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், இன்பா ரகு, இளையராஜா, சி. ஆனந்த்குமார், மேயர் ஜி.உதயகுமார் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். மேலும், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் ப.ச.கமலேஷ், சன்பிரகாஷ், ஜி. ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன், தி.வை.இரவி, டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், முரளி கிருஷ்ணன், சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, தி.வே.முனுசாமி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கவுன்சிலர்கள், கழக இந்நாள்–முன்னாள் மூத்த முன்னோடிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



என்.டி.டிவி–யின் நிர்வாக ஆசிரியர் சிவ் அரூர் மற்றும் அரசியல் பிரிவு ஆசிரியர் வசுதா வேணுகோபால் ஆகியோர் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சென்னையில் நேற்று சந்தித்தனர். இந்த சந்திப்பின் போது பல்வேறு கருத்துகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. மேலும், அவர்களுக்கு எதிராக எதிர்க்கட்சி தலைவர் சார்பாக தொடரப்பட்ட சட்ட நடவடிக்கைகள் மீது அவர்களுடைய நிலைப்பாட்டினை விளக்கியதோடு, என்.டி.டிவி என்றும் ஊடக அறத்துடன் செயல்பட்டது எனவும், எதிர்காலத்திலும் நடுநிலையான செய்திகளையே வெளியிடும் என்றும் உறுதி அளித்தனர்.

## மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத, ஜனநாயக விரோத ஒன்றிய மோடி அரசையும் – மாநில விஜய் அரசையும் கண்டித்து

# மாநிலம் முழுவதும் செப்டம்பர் 22 அன்று தொ.மு.ச. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!

சென்னை, செப்.21–

மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத, ஜனநாயக விரோதப் போக்குகளை கடைப்பிடித்து வரும் ஒன்றியத்தை ஆளும் மோடி தலைமையிலான அரசையும், மாநிலத்தில் ஆளும் த.வெ.க. அரசைக் கண்டித்தும் வருகிற செப்டம்பர் 22 அன்று மாநிலம் முழுவதும் தொ.மு.ச. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலத்தில் உள்ள தொ.மு.ச. இணைப்புச் சங்க செயல்வீரர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்க வேண்டும் என தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான மு.சண்முகம் அவர்கள் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றியத்தை ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு இந்திய மக்களின் உழைப்பால் உருவான பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பது, நவரத்ன மகா, நவரத்னா நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு தாரை வார்ப்பது. தேசியப் பண மயமாக்கல் கொள்கை 2.0, அண்மையில் வெளியிடப்பட்டு தேசத்தின் சொத்துக்கள் தனி யாருக்கு தாரைவார்க்க அல்லது குத்தகை என்ற பெயரால் வழங்கிட முடிவு செய்யப் பட்டுள்ளது.



### தொழிற்சங்கங்களோடு கலந்தாலோசிக்கவில்லை!

மேலும், தொழிலாளர் வர்க்கத்தை பாதிக்கும் இந்நாட்டு பன்னாட்டு முதலாளிகள் இலகுவாகத் தொழில் செய்ய அவசர கதியில் நாடாளுமன்றத்தில் சட்டத்தை இயற்றியதோடு, அதற்கான விதி தொகுப்புகளை வெளியிட்டுள்ளது. இந்த தொகுப்பு சட்டங்கள் மற்றும் விதிகள் சம்மந்தமாக தொழிற்சங்கங்களோடு முறையான கலந்தாலோசனை நடைபெறவில்லை. இந்திய தொழிலாளர் மாநாடு கூட்டப்படாமலேயே தொகுப்புச் சட்டங்களையும் விதிகளையும் நடைமுறைப்படுத்த துடித்துக் கொண்டிருக்கிறது. மின்சார சட்டம் திருத்த உத்தேசித்துள்ளது அதன் விளைவாக உற்பத்தி விநியோகம், பராமரிப்பு தனியார் மயமாகும் அபாயம் உள்ளது.

### விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை!

விவசாயிகளை பாதிக்கும் விதைச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. விவசாயிகளின் நீண்ட போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் குறைந்தபட்ச ஆதார விலை நிர்மாயம் செய்யப்படவில்லை. பொதுவிநியோகத் திட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டமும், வேலையின்றி காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலை வழங்கும் திட்டமும் இல்லை,

இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள பேச்சுரிமை எழுத்துரிமை, அமைதியாக ஒன்று கூடும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமைகளின் குரல் வளையை நசுக்கி இத்தகைய சமூக செயல்பாடுகளில் ஈடுபடுவோரை “அறிவார்ந்த நக்சலைட்டுகள்” என பிரதமர் மோடி வர்மரிக்கிறார்.

ஒன்றிய அரசாங்கத்தின் செயல்பாடுகளில் எந்த மாற்றமுமின்றி தமிழகத்தில் நடைபெறும் த.வெ.க அரசு பேச்சுரிமை, எழுத்துரிமை, அமைதியாக ஒன்றுகூடி போராடும் உரிமை போன்றவற்றில் கண்மூடித்தனமான அடக்குமுறைகளை என்கிறது.

### தனியாருக்கு தாரைவார்க்கும் செயல்!

எண்ணூர் அனல்மின் நிலைய விரிவாக்கம், தூத்துக்குடி அனல்மின் நிலைய விரிவாக்கப் பணிகளை தனியாருக்கு தாரை வார்க்கப் பார்க்கிறது. கோவை - அரியலூர், விருதுநகர் - கோவை மின் பாதைகளை தனியாருக்கு தாரை வார்க்க முடிவு செய்துள்ளது. ஸ்மார்ட் மீட்டர் பொருத்துதல் பணியை தனியார் மூலம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. மின் கல சேமிப்பு அமைப்பு (BESS) தனியாருக்கு தாரைவார்க்க முடிவு செய்துள்ளது.

### டாஸ்மாக் – அங்கன்வாடி பணியாளர்களை பணி நிரந்தரப்படுத்து!

20 ஆயிரம் மின்வாகன சார்ஜிங் நிலையங்களை தனியாருக்கு தாரை வார்க்க முடிவு செய்துள்ளது. மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 1000 மின் பேருந்து இயக்கத்தை ஒட்டு மொத்த ஒப்பந்த அடிப்படையிலும் (GCC) சேலம் குடிநீர் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைத்துள்ளது. டாஸ்மாக் நிறுவனத்தை தனியார் மயமாக்குதல், மூடிய கடைகளுக்குப் பதிலாக FL2 மற்றும் 11-11 என்ற அடிப்படையில் தனியாரிடம் ஒப்படைக்கிறது. டாஸ்மாக் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை குற்றவாளியாக சித்தரிக்க முயல்கிறது. டாஸ்மாக் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை பணி நிரந்தரம், கால முறை ஊதிய கோரிக்கைகள் சம்மந்தமாக பேச மறுக்கிறது.

திராவிட மாடல் நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு ஊழியர் ஆசிரியர் அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தி தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதில் கடைசி மாத சம்பளத்தில் பாதியை (50 சதவிகிதம்) ஓய்வூதிய கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்வது என்றும் 10 ஆண்டுகள் பணி முடித்தால் ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற தி.மு.க. அரசின் அறிவிப்பை த.வெ.க. அரசு அரசாணை எண் 111 நாள் 16.06.2026 அன்று வெளியிட்டு கடைசி மாத சம்பளத்தில் 50 சதவிகிதம் என்பதை 30 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. 10 ஆண்டுகள் பணி புரிந்தால் ஓய்வூதியம் தகுதி என்பதை 18 ஆண்டுகள் எனவும், குறைந்த பட்ச பென்ஷன் ரூபாய் பத்தாயிரம் எனவும் நிர்ணயித்து அரசு ஊழியர், ஆசிரியர்களை த.வெ.க. அரசு ஏமாற்றுகிறது.

போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விட பணிகள் நடைபெறுகிறது. பொது விநியோகத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தாயுமானவர் திட்டத்தை தனியார் மயமாக்க பணிகளை தொடங்கியுள்ளது.

### பேரவை இணைப்புச் சங்க செயல்வீரர்கள் பெருமளவில் பங்கேற்பீர்!

தமிழ்நாட்டில் நடைபெறும் த.வெ.க. ஆட்சி ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயல்பாடுகளை ஒட்டியே பெரு முதலாளிகளுக்கு அனைத்தையும் ஒப்படைக்க முயன்று வருகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் மாநில த.வெ.க. அரசின் மக்கள் விரோத – தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, ஜனநாயக விரோதப் போக்குகளைக் கண்டித்து வருகிற செப்டம்பர் 22 அன்று மாநிலம் தழுவிய அளவில் தொ.மு.ச. பேரவை செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்க செயல்வீரர்கள் பெருமளவில் கலந்து கொண்டு ஒன்றிய - மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்ப வாரீர் என தொ.மு.ச. பேரவை சார்பாக அழைக்கிறோம்.

இவ்வாறு தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் தெரிவித்துள்ளார்.



உத்திரமேரூர் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் காஞ்சி தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் ஆலோசனை கூட்டம் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் தலைமையிலும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் வரவேற்பிலும் மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜோயல்,அப்துல் மாலிக், இளையராஜா, பிரபு கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற கூட்டத்தில் மதுராந்தகம் இடைத்தேர்தலில் திமுக வெற்றி பெற மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எபினேஷர், ஈஸ்வரப்பா, பிரபகர் ராஜா , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மற்றும் பல்வேறு மாவட்டங்களை சார்ந்த இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து தேர்தல் பணியாற்ற பல்லாவரம், தாம்பரம் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த செம்பாக்கம் வடக்கு பகுதி மற்றும் தாம்பரம் கிழக்கு பகுதி கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட கினார் ஊராட்சி, கே.கே.புதூர், 243 பாகத்தில் தேர்தல் பணி ஆற்றுவது குறித்து கே.கே.புதூர் பொறுப்பாளர்கள் செம்பாக்கம் வடக்கு பகுதிச் செயலாளர் பல்லாவரம் ஏ.கே. கருணாகரன், தாம்பரம் கிழக்கு பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் ஆகியோர் தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி, மதுராந்தகம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்.சிவக்குமார், விவசாய அணி துணை அமைப்பாளர் ஜெ.அரசு, செம்பாக்கம் வடக்கு பகுதி துணைச் செயலாளர் எச். பாஸ்கரன், செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.ஆர்.நரேஷ்குமார், கே.பிரபு, 35 வது வட்டச் செயலாளர் ஆர். ராதாகிருஷ்ணன், எம்.ஐ.டி.இ.சுரேஷ். தாம்பரம் கிழக்கு பகுதி நிர்வாகிகள் பொன்.சதாசிவம், ஆர்.பன்னீர்செல்வம், எம்.செந்தில்குமார். வழக்கறிஞர் கார்த்திக், கிணார் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.